ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2365/02 - 2024 ජනවාරි මස 01 වැනි සඳුදා - 2024.01.01

*2365/02 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேருநர் இடாப்பு மீளாய்வு - 2024**

2024 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளை 2024, சனவரி மாதம் 01 ஆந் திகதி ஆரம்பிப்பதாக 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம் அல்லது சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 12(1) ஆம் பிரிவுக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. தற்போது செல்லுபடியாகும் 2023 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்பு, 2023 (1) மற்றும் 2023 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் (இதனகத்துப் பின்னர் "செல்லுபடியாகும் தேருநர் இடாப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அல்லது அவற்றின் பகுதிகளின் பிரதிகள் பதிவு அலுவலர்களால் கீழ் குறிப்பிடப்படும் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படும்.

| இடாப்பு அல்லது அவற்றின் பகுதிகளின் பிரதிகள் காட்சிப்படுத்தப்படும் அலுவலகங்கள் | காட்சிப்படுத்தப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|
| மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் | தேர்தல் மாவட்டத்திற்குரிய /நிருவாக மாவட்டத்திற்குரிய செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் முழுப் பிரதி |
| கிராம அலுவலர் அலுவலகங்கள் | கிராம அலுவலர் பிரிவின் செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் பகுதி |

3. இதற்கமைய, ஏதேனுமொரு தேர்தல் மாவட்டத்தின் தேருநராகுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ள சகலருக்கும் தமது பெயரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காட்சிப்படுத்தப்படும் தேருநர் இடாப்புக்களைப் பரிசீலித்து உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இது தவிர ec.lk/vrd தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திற்குப் பிரவேசித்து பரிசீலிக்க முடியும். இந்த அறிவித்தலில் காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் (scan) செய்வதனூடாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1A - G 41163 — 19 (2024/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளை கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

5. 2023.10.31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு, 2023.09.15 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2023 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு, 2023.10.02 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2023 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்புடன் 2024.02.01 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவிருக்கும் 2023 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள பெயர்களை ஒன்றிணைத்து 2024 ஆம் ஆண்டிற்கான தேருநர்களைக் கணக்கெடுப்பதற்கான ஒன்றிணைந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

6. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளினதும் கிராம அலுவலர்கள் தேருநர்களைக் கணக்கெடுக்கும் அலுவலராக நடவடிக்கை மேற்கொள்வார். சந்தர்ப்பத்திற்கேற்ப விசேட கணக்கெடுப்பு அலுவலர்களையும் ஈடுபடுத்த முடியும்.

7. தேருநர்களைக் கணக்கெடுப்பதற்காக கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் செல்லும் பணி 2024.01.01 ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

8. கணக்கெடுப்பு அலுவலர் சகல வீடுகளுக்கும் வருவதுடன் அவர் கொண்டுவரும் ஒன்றிணைந்த தேருநர்களைக் கணக்கெடுக்கும் பட்டியலில் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் மீது கவனத்தைச் செலுத்தி பிரதான குடியிருப்பாளர் கையொப்பத்தை இடுதல் வேண்டும். கணக்கெடுப்பு அலுவலர் சில தடவைகள் வீட்டிற்குச் சென்றபோதிலும் பிரதான குடியிருப்பாளர் அல்லது வயது வந்த ஒருவரைச் சந்திப்பதற்கு முடியாவிட்டால் கணக்கெடுப்பு அலுவலரைச் சந்தித்து இந்த அறிவித்தலின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளல் பிரதான குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

9. எவரேனுமொரு தேருநர் 2023 ஆம் ஆண்டிற்கான செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின் 2024 ஆம் ஆண்டிற்கும் 2023 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதியப்பட்டிருந்த முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதற்காக பிரதான குடியிருப்பாளர் ஒன்றிணைந்த கணக்கெடுப்புப் பட்டியலில் கையொப்பத்தை இடுவதனைத் தவிர வேறு எந்தவொரு படிவத்தையும் பூரணப்படுத்துவதற்கான தேவைப்பாடு இல்லையெனவும் கவனத்திற்கொள்ளவும். எவரேனுமொருவர் 2023 ஆம் ஆண்டில் பதியப்பட்டிராவிட்டால் அல்லது 18 வயது பூர்த்தியாதலின் அடிப்படையில் முதற் தடவையாக தேருநராகப் பதிவு செய்யப்படின் அல்லது 2023 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரியை மாற்றியமைக்க வேண்டியிருப்பின் 2024 ஆம் ஆண்டிற்கான தேருநராகப் பதிவு செய்தற்காக 2024/ER படிவத்தைப் பூரணப்படுத்தி கணக்கெடுப்பு அலுவலரிடம் கையளிக்கவும். மேலதிக விபரம் 2024 /ER படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10. 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொண்டுள்ள தேருநர் ஒருவர் மரணித்தல் அல்லது வதிவிடம் மாற்றமடைதல் அல்லது வேறு காரணத்தினால் 2024 ஆம் ஆண்டிற்கான பதிவுக்காக தகைமைகளைப் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் அது பற்றியும் உங்களுடைய கணக்கெடுப்பு அலுவலரை அறிவுறுத்தவும். இவ்வாறு தகைமையீனத்திற்கு ஆளாகும் ஆட்களை 2023 'அ' பட்டியல்படுத்தி செல்லுபடியாகும் இடாப்பிலிருந்து நீக்கப்படும். செல்லுபடியாகும் இடாப்பில் உள்ளடக்கப்பட்டிராத ஆனாலும் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் முகவரியொன்றின்கீழ் தனது பெயரை இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆட்களை 'ஆ' பட்டியல்படுத்தி 2024 ஆம் ஆண்டு இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளப்படும்.

11. 2024.02.01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்யும் ; அதாவது 2006.01.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த ஆட்கள் 2024 ஆம் ஆண்டிற்கான பிரதான தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

12. தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய, 'அ', 'ஆ' பட்டியல்களை காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளைக் கையேற்றல் பற்றிய அறிவித்தல் 2024.04.09 ஆந் திகதி பிரசித்தப்படுத்தப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 28 நாட்களுக்குள் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. எதிர்வரும் காலப்பகுதியில் அத்தாட்சிப்படுத்தப்படவிருக்கும் கீழ் குறிப்பிடப்படும் 06 குறைநிரப்பு இடாப்புக்களுக்காக YC படிவங்களூடாக தகவல்கள் சேகரித்துக்கொள்ளப்படும். குறைநிரப்பு பட்டியல்களை காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளைக் கையேற்றல் பற்றி எதிர்வரும் காலப்பகுதியில் பிரசித்தப்படுத்தப்படும் அறிவித்தல்களூடாக அறிவிக்கப்படும்.

13.1. 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் குறைநிரப்பு தேருநர் இடாப்பு

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயதைப் பூர்த்தி செய்யவேண்டிய காலப்பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| 2024 (1) | 2024.02.01 முதல் 2024.05.31 வரை | 2006.02.01 முதல் 2006.05.31 வரை |
| 2024 (2) | 2023.06.01 முதல் 2023.09.30 வரை | 2006.06.01 முதல் 2006.09.30 வரை |
| 2024 (3) | 2023.10.01 முதல் 2025.01.31 வரை | 2006.10.01 முதல் 2007.01.31 வரை |

*13.2. 2025 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் குறைநிரப்பு தேருநர் இடாப்பு*

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயதைப் பூர்த்தி செய்யவேண்டிய காலப்பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| *2025 (1)* | *2025.02.01 முதல் 2025.05.31 வரை* | *2007.02.01 முதல் 2007.05.31 வரை* |
| *2025 (2)* | *2025.06.01 முதல் 2025.09.30 வரை* | *2007.06.01 முதல் 2007.09.30 வரை* |
| *2025 (3)* | *2025.10.01 முதல் 2026.01.31 வரை* | *2007.10.01 முதல் 2008.01.31 வரை* |

*14. 2023.10.31 ஆந் திகதியன்று செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தேருநர்கள் பற்றிய விபரத்தை சகல வீடுகளுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் அல்லது அடையாள அட்டை இலக்கங்களில் பிழைகள் இருப்பின் உடனடியாக கணக்கெடுப்பு அலுவலருக்கு தெரிவிக்கவும். அதில் பெயர் குறிப்பிடப்படாத 2024 ஆம் ஆண்டிற்காக தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள தேருநர்கள் இருப்பின் மேலே 09 ஆம் பந்தியின் அறிவுறுத்தலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளவும்.*

தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,

ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
*ராஜகிரிய,*
*2024, சனவரி 01.*

EOG 01-0007

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.